டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 10.10.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 094 | Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வாழை விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், அக்.9

இந்திய விவசாயத்தில் வாழை ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அதன் சத்துக்கள் நிறைந்த தன்மை, ஆண்டு முழுவதும் கிடைக்கும் தன்மை மற்றும் விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவுகிறது. உலக அளவில் வாழை உற்பத்தியில் முன்னணியில் உள்ள இந்தியா, நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற மக்களின் பொருளாதார நிலைப்புத் தன்மைக்கு இப்பயிரைப் பெரிதும் சார்ந்துள்ளது.

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் 2024-25 ஆம் ஆண்டுக்கான இறுதி மதிப்பீட்டின்படி, இந்தியாவில் 9.02 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டு, ஹெக்டேருக்கு 49,486 கிலோ உற்பத்தித் திறனுடன் மொத்தம் 383 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகியவை முக்கிய வாழை உற்பத்தி மாநிலங்களாக திகழ்வதுடன், ஒட்டுமொத்த உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழகத்தில் வாழை ஒரு முக்கிய தோட்டக்கலை பயிராகும். இது விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் மதிப்புக்கூட்டு சங்கிலி களை ஆதரிப்பதோடு, முக்கனிகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது. பூவன், கற்பூரவள்ளி, நேந்திரன், மொந்தன், ரஸ்தாளி, ஏலக்கி, நாடன், செவ்வாழை மற்றும் கிராண்ட் நெய்ன் உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் தமிழகம் முழுவதும் பயிரிடப்படுகின்றன. ஈரோடு, தேனி, தூத்துக்குடி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப் பள்ளி ஆகியவை முக்கிய வாழை உற்பத்தி மாவட்டங்களாகும்.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 1.14 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டு, 45 லட்சம் டன் உற்பத்தியும், ஹெக்டேருக்கு 39,691 கிலோ உற்பத்தித் திறனும் எட்டப்பட்டுள்ளது. வாழையின் எளிதில் அழுகும் தன்மை, தொடர்ச்சியான நுகர்வோர் தேவை மற்றும் வானிலை மாற்றங்களால், அதன் விலையானது உற்பத்தி மற்றும் சந்தை வரத்துக்கேற்ப பெரிதும் மாறுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி மேம்பாட்டு மையத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, கோயம்புத்தூர் சந்தையில் பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழை ரகங்களின் கடந்த 20 ஆண்டுகால விலை விவரங்களை ஆய்வு செய்து, உள்ளூர் சந்தைகள் மற்றும் வர்த்தகர்களிடம் ஆய்வு மேற்கொண்டது.

இந்த ஆய்வறிக்கையின்படி, சீரான வானிலை நிலவும் பட்சத்தில், 2026 ஆம் ஆண்டு அக்டோபர் - நவம்பர் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் சராசரி பண்ணை விலை, பூவன் ரகத்திற்கு கிலோ ரூ.23 முதல் ரூ.25 வரையிலும், கற்பூரவள்ளி ரகத்திற்கு ரூ.25 முதல் ரூ.28 வரையிலும், நேந்திரன் ரகத்திற்கு ரூ.33 முதல் ரூ.35 வரையிலும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது விற்பனை முடிவுகளை இதற்கு ஏற்ப திட்டமிட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தகவல் விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப்பிரிவு, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், அக்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நாட்கள் பயிற்சி வருகிற 13.10.26 மற்றும் 14.10.26 தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்கவகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். இந்த பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்கள் எளியமுறையில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அவையாவன :**

- ரொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770 (ரூ.1500 + GST18%) செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சி நடைபெறும் இடம் : **அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலைசாலை வழி) கோயம்புத்தூர்– 641003.**

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் தலைப்பில் பயிற்சி



விழுப்புரம், அக்.9

விழுப்புரம் மாவட்டம், வல்லம் வட்டாரம் வேளாண்மை துறை வேளாண் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் என்ற தலைப்பில் ஒரு நாள் உள் மாவட்ட பயிற்சி வல்லம் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கம் மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வல்லம் வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு சத்யா தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார். ராஜா தேசிங்கு உழவர் உற்பத்தியாளர் குழு இயக்குனர் பாலு ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் தற்சார்பு பொருளாதாரம் பற்றி விளக்கி பேசினார். தொடர்ந்து வட்டார தொழில் மேலாளர் சுபாஷ் ஒருங்கிணைந்த பண்ணைய முறை செயல் வடிவங்கள் மற்றும் நிலத்திற்கு ஏற்ற மாதிரிகள் பற்றி பேசினார். ஒருங்கிணைந்த பண்ணைய விவசாயிகள் தங்களது அனுபவத்தை ஒருங்கிணைந்த பண்ணையின் மூலம் கிடைக்கப் பெறும் லாபத்தை பகிர்ந்து கொண்டனர். உதவித் தொடர்பு மேலாளர் பாலாஜி இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். வல்லம் வட்டாரத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# சம்பா நெல் பயிருக்கு பதிலாக மாற்றுப் பயிர் சாகுபடி திருமானூர் வட்டார வேளாண்மைத்துறை தகவல்

அரியலூர், அக்.9

சம்பா நெல் பயிருக்கு மாற்றுப்பயிராக சிறுதானியங்கள், எள், உளுந்து ஆகிய பயிர்களை சாகுபடி செய்து குறைந்த செலவில் அதிக நிகர லாபம் அடையுமாறு அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டார விவசாயிகளை வேளாண்மைத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து வேளாண்மைத் துறையினர் பின்வரும் தகவல் களைத் தெரிவித்துள்ளனர். மேட்டூர் அணையின் நீர்மட்டம் மிகவும் குறைந்து வருவதால் சம்பா நெல் சாகுபடிக்கு பாசன நீர் வழங்க முடியாத நிலை உள்ளது. எனவே சம்பா நெல் பயிருக்கு மாற்றுப்

பயிராக வரகு, சாமை, தினை, பனிவரகு, குதிரைவாலி ஆகிய சிறுதானியப் பயிர்களை சாகுபடி செய்யலாம். மேலும் எண்ணெய்-வித்துப் பயிர்களில் எள் மற்றும் பயறுவகைப் பயிர்களில் உளுந்து சாகுபடி செய்யலாம். இந்த மாற்றுப் பயிர்கள் அனைத்தும் குறுகிய காலப் பயிர்களாகும். இப்பயிர்களுக்கு பாசன நீர்த் தேவையும் குறைவாக உள்ளது. எனவே குறுகிய காலத்தில் குறைவான பாசன நீர்த்தேவை மற்றும் குறைந்த செலவில் நடப்பு சம்பா பருவத்தில் இப்பயிர் களை சம்பா நெல் பயிருக்கு மாற்றுப்பயிராக சாகுபடி செய்து அதிக நிகர லாபம் அடையுமாறு திருமானூர் வட்டார வேளாண்மைத் துறையினர் விவசாயிகளை கேட்டுக் கொண்டு உள்ளனர்.

# ஆம்பூர் இயற்கை வேளாண் திருவிழா 2026 மற்றும் பாரம்பரிய அரிசி மற்றும் விதைகள் கண்காட்சி!

திருப்பத்தூர், அக்.9

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் இயற்கை வழி வேளாண் விவசாயிகள் கூட்டமைப்பு முன்னெடுக்கும் சிறப்பு நிகழ்ச்சியில், பாரம்பரிய அரிசி வகைகள் கண்காட்சி, மரபு விதைகள் கண்காட்சி, கருத்தரங்கம் & கலந்துரையாடல், விற்பனை அரங்குகள், அடுப்பில்லா சமையல் இலவச பயிற்சி ஆகியவை இடம்பெறும்.

11.10.2026 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி முதல் இரவு 6.00 மணி வரை, பிரியா மஹால் (Priya Mahal) நடைபெறும்.

**அனுமதி இலவசம்!**

அனைவரும் வருக! , நல் ஆதரவு தருக!!

தொடர்புக்கு : 98844 02468, 85260 10490, 97903 88452.



# நுண்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் செயல்விளக்க பயிற்சி நடந்தது




மதுரை, அக்.9

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக ஒரு நாள் பயிற்சியாக நுண்கீரைகள் என்னும் இளம் தளிர்கீரைகள் அதாவது (Microgreens) வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய செயல் விளக்க பயிற்சியானது நடைபெற்றது. பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் கி.சுரேஷ் துவக்கி வைத்து தன்னுடைய தலைமை உரையில் இளம் தளிர்கீரைகள் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். முனைவர் ப.அருள் அரசு வரவேற்புரை வழங்கி இளம் தளிர்கீரைகள் வளர்க்க விதைகள் தேர்ந்தெடுக்கும் முறை அதை வளர்க்க தயாரிக்கும் ஊடகங்கள் தயாரிக்கும் முறை அவற்றின் pH தன்மை மற்றும் வளர்க்கும் முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஊட்டச்சத்து விஞ்ஞானி யான முனைவர் கி.ஜோதிலட்சுமி இளம் தளிர்கீரைகளில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பயன்படுத்தும் முறைகள் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய செயல்முறை விளக்கங்களை வழங்கினார்.

ஆர்.என்.ஆர்.அக்ரி டெவலப்பர்ஸ் முனைவர் ராஜேஷ் நல்லையா கலந்து கொண்டு இளம் தளிர்கீரைகள் (மைக்ரோகிரீன்ஸ்) சந்தை வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் இந்நிலையத்தின் விஞ்ஞானிகளான முனைவர் கு.ஆனந்த் மற்றும் முனைவர் செல்வராணி பங்கெடுத்து சிறப்பித்தனர். இப்பயிற்சியில் மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட உதவியாளர் (தொழில் நுட்பம்) முனைவர் ச.ஜெ.விஜயலலிதா, பண்ணை மேலாளர் இ.காயத்திரி தேவி, திட்ட உதவியாளர் (கணினி) ந.ரம்யா ஆகியோர் இப்பயிற்சியினை ஒருங்கிணைத்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண் அறிவியல் நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு!



கள்ளக்குறிச்சி, அக்.9

மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா, 8.10.26 அன்று சின்னசேலம் வட்டம், காளசமுத்திரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு (KVK), ஆய்வு வருகை மேற்கொண்டார்.

இந்த வருகையின்போது, வேளாண் அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர். மொ.ச.கண்ண தாசன் மற்றும் அலுவலகப் பணியாளர்களுடன் கலந்துரையாடி, நிலையத்தின் பணியாளர் விவரங்கள், பணிகள், செயல்பாடுகள், விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டங்கள் மற்றும் மாவட்ட மேம்பாட்டிற்கான மையத்தின் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார். மேலும், வரவிருக்கும் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பருவமழைக்கு ஏற்ற வேளாண் நடைமுறைகள் மற்றும் கால்நடை மேலாண்மை குறித்த சிறப்புப் பயிற்சிகளை வழங்குமாறு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மண் மற்றும் நீர் பரிசோதனை ஆய்வகம், மண் வள அட்டை, கண்காட்சி அரங்கம், உணவுப் பதப்படுத்தும் ஆய்வகம் மற்றும் வேளாண் செயல்விளக்க அலகுகளைப் பார்வையிட்டார். முள்ளில்லாக் கள்ளி சாகுபடி, கடக்நாத் கோழி வளர்ப்பு, முட்டை அடைகாப்பான், நிலக்கடலை விதை உற்பத்தி, மூலிகைத் தோட்டம், ஐந்து சென்ட் தீவன மாதிரி அலகு, கிழங்கு வகைகள் செயல்விளக்க அலகு, டிராகன் பழ சாகுபடி, வேர் உட்பூசணம் காளான் வளர்ப்பு, நாற்றங்கால் அலகு, மண்புழு உரம் தயாரிப்பு, இயற்கை இடுபொருள் தயாரிப்பு, தேனீ வளர்ப்பு, மீன் குளம், பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் உயிர்வேலி உள்ளிட்ட பல்வேறு செயல்விளக்கத் திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

மேலும், கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) நிறுவனத்துடன் இணைந்து பட்டியல் இன விவசாயி களுக்காக நடத்தப்பட்டு வரும் இன்றைய பயிற்சியைப் பார்வையிட்டு, பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் பயிற்சி ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் மண் மற்றும் நீரின் தரம், மண்ணில் உள்ள கரிமக் கார்பன் அளவு, இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளின் மண்வள மேம்பாட்டுத்தன்மை, மாவட்டத்தில் பாரம்பரிய நெல் இரகங்களின் கிடைப்புத்தன்மை, கால்நடை எண்ணிக்கை மற்றும் புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகளின் விழிப்புணர்வு ஆகியவை தொடர்பான பணிகளை கேட்டறிந்தார்.

ஆய்வின் நிறைவில், சமவெளி மற்றும் மலைப்பகுதிகளுக்கு ஏற்ற மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் இரகங்களான ஊதா நிறச் சேனைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு மற்றும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு சாகுபடியை ஊக்குவிக்க அறிவுறுத்தினார். கடக்நாத் கோழி இனத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்தவும், பிரண்டை உள்ளிட்ட பயனுள்ள மூலிகைகளின் பயன்பாடுகளை எடுத்துரைக்கவும் வலியுறுத்தினார்.

மேலும், வேளாண் அறிவியல் நிலையத்திற்கு வருகை தரும் விவசாயிகள் அனைத்து செயல்விளக்க அலகுகளையும் பார்வை யிட்டு, அவற்றின் தொழில்நுட்பங்களைப் புரிந்து கொண்டு தங்கள் பண்ணைகளில் செயல்படுத்தும் வகையில் விவசாயிகளின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டும் எனவும் மையத்தின் பணிகள் குறித்த தகவல்கள் பரவலாக்குதலை மேம்படுத்தவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வு வருகை, மாவட்ட விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட தொழில்முனைவுத் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதாக அமைந்தது.




# விதைகளின் தரம் குறித்து ஆய்வில் 4.74 மெ.டன் அளவில் விதைகள் விற்பனைக்கு தடை

சேலம், அக்.9

சேலம் மாவட்டத்தில் அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் என 975 விதை விற்பனை நிலையங்கள் உள்ளன. இவ்விதை விற்பனை நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு விநியோகிக்கப்படும் விதைகளின் தரம் குறித்த ஆய்வு சேலம் விதை ஆய்வு துணை இயக்குநரின் தலைமையிலான விதை ஆய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செப்டம்பர் 2026 மாதத்தில் 545 விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு 710 விதைமாதிரிகள் எடுக்கப்ருபட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இதில் 20 மாதிரி களில் முளைப்புத்திறன் குறைவு காரணமாக தரமற்றதாக அறிய பட்டதை அடுத்து 21.99 இலட்சம் மதிப்பிலான 4.74 மெட்ரிக் டன் அளவில் விதைகள் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டு இவ் விதைகள் விவசாயிகளுக்கு சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளது.

3 விதை விற்பனையாளர்கள் மீது தரமற்ற விதை விற்பனை செய்தமைக்காக நீதிமன்ற நடிவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. விதை விற்பனையாளர்கள் விதை விற்பனைச் சட்டவிதிமுறைகள்படி தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்.

விதை விற்பனையின் போது முளைப்புத்திறன் அறிக்கை, பதிவுச்சான்று, விலைப்பட்டியல், சரியான இருப்பு விபரம் ஆகியவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும். மேலும் காலாவதியான விதைகள் விற்ககூடாது. தவறும்பட்சத்தில் விதைச் சட்டவிதிமுறைகளின் கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளை விதை விற்பனை நிலையங்களில் வாங்கும் போது

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

விதைப்பொட்டலங்களின் மீது உள்ள விதை விபரங்களில் பயிர், இரகம் நிலை, குவியல் எண், காலாவதி நாள், முளைப்புத்திறன், புறந்தூய்மை, இனத்தூய்மை மற்றும் நமது பகுதிக்குரியதா ஆகிய விபரங்களை சரி பார்த்து வாங்க வேண்டும். மேலும் வாங்கும் விதைகளுக்குரிய விலைப்பட்டியலைக் கேட்டுப் பெற வேண்டும்.அவ்வாறு பெறும் விலைப்பட்டியலில் பயிர் இரகம், காலாவதி நாள், குவியல் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சரி பார்த்து பெற வேண்டும். இப்பட்டியலை பயிர் அறுவடை முடியும் வரை பத்திரப்படுத்தி வைத்திருக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




# மைக்ரோ கிரீன்ஸ் - ஒரு பார்வை



இன்றைய இளைய தலைமுறைகளால் விரும்படும் மைக்ரோ கிரீன்ஸ் (MICRO GREENS) என்பது தானிய, காய்கறிகளின் இளம் வயது நாற்றுக்களை (COTYLEDANS LEAVES) (7 முதல்14) நாட்களுக்குள் அறுவடை செய்து சாப்பிடும் முறையாகும். (நமது கிராமப்புறங்களில் திருவிழாவுக்காக முளைப்பாரி வளர்ப்பது போல).

**எந்த எந்த பயிரில் அதிகமாக மைக்ரோ கிரீன்ஸ் பயிரிடப்படுகிறது?**

சூரிய காந்தி, பச்சைபயறு, வெந்தயம், கடுகு, பட்டாணி, முள்ளங்கி, புரோக்கோலி, கோதுமை புல் போன்ற பயிர்களில் அதிகமாக மைக்ரோ கிரீன்ஸ் பயிரிடப்படுகிறது.

**சிறப்பு என்ன?**

இவை காய்கறிகளை விட பல மடங்கு அதிகமான வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் (ANTI- OXIDENT) களை கொண்டுள்ளதால் உலகம் முழுவதும் வரவேற்பை பெற்று உள்ளன. நகர்ப்புறங்களில் மட்டுமல்ல, சிறிய நகரங்களிலும் இதனுடைய தேவை நாளுக்கு நாளாக அதிகரித்த வண்ணமாக உள்ளது. இதன் மூலமாக தினசரி வருமானம் பெறலாம், வீட்டிலிருந்தே தொழில் தொடங்கலாம். பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு சிறந்த சுய வேலைவாய்ப்பு (SELF EMPLOYMENT).

**எப்படி நுண் கீரைகளை வளர்ப்பது?**

சிறிய டிரேக்களில் விதைகளை விதைத்து பூவாளியால் தண்ணியை தெளித்து வீட்டுல வளர்க்கலாம். 7 முதல் 14 நாட்களில் அறுவடை செய்வதே இதனுடைய சிறப்பு. மிகக் குறைந்த முதலீட்டில், நவீன விவசாயம் போல உற்பத்தி செய்யலாம்.

மைக்ரோ கிரீன்ஸ் ஆரோக்கிய உணவே தவிர எந்த நோயையும் குணப்படுத்தும் மருந்தல்ல. மருத்துவ சிகிச்சைக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடாது.

**எங்கெங்கு இதனை விற்பனை செய்ய சந்தை வாய்ப்புள்ள இடங்கள்?**

ஓட்டல்கள், உணவகங்கள், ஜுஸ் கடைகள், நலவாழ்வு மையங்கள் போன்ற இடங்களில் நேரடியாக விற்பனை செய்வதுடன் அதிகமாக லாபம் பெறலாம். சால்ட், சூப் மற்றும் சாண்ட் விச்சுகளில் அழகாகவும் சுவைக்காகவும் பச்சையாக பயன்படுத்தப்படுகிறது.

**மைக்ரோ கிரீன்ஸ் வளர்ப்பதற்கான காரணம் என்ன?**

ஆண்டு முழுவதும் உற்பத்தி, அதிக ஊட்டசத்து மதிப்பு, உணவு சந்தைகளில் அதிக தேவை, பச்சையான உணவு, நஞ்சில்லா நுண்கீரைகள்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# ஆடு வளர்ப்பு பற்றிய உள்வளாக பயிற்சி



கடலூர், அக்.9

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தா சலத்தில், 09.10.26 அன்று ஆடு வளர்ப்பு பற்றிய உள்வளாக பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, ஆடு வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் ஆடு வளர்ப்பு மூலம் பொருளாதார நிலையை உயர்த்துவது குறித்தும் விளக்கினார். கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கடலூர் முனைவர் ந.வெங்கடபதி (பேராசிரியர் மற்றும் தலைவர்), ஆட்டுப் பண்ணை துவங்கும் முன் கவனிக்க வேண்டியவை, ஆடு வளர்ப்பின் நோக்கம், ஆடு வளர்ப்பின் முறைகள், கொட்டகை அமைக்கும் முறைகள், கொட்டகை இடம் தேர்வு செய்தல், பசுந்தீவனம் வளர்க்க கவனிக்க போதுமான இடம், ஆட்டிற்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை, தாது உப்புகள் எப்பருவத்தில் பயன்படுத்துவது மற்றும் நோய் பராமரிக்கும் முறைகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் இப்கோ நிறுவனம் ஐயப்பன் கலந்துக் கொண்டு தங்களது, கருத்துக்களை விவசாயிகளுடன் பகிர்ந்துக் கொண்டார். மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# குடவாசலில் வேளாண் மாணவர்களின் களப்பயணம் : உரங்கள் மற்றும் விதை ரகங்கள் குறித்து நேரடி பயிற்சி



நாகப்பட்டினம், அக்.9

திருவாரூர் மாவட்டம், குடவாசல், வேளாண் மாணவர்கள் குழு குடவாசலில் அமைந்துள்ள வேளாண் உள்ளீட்டு கடையான AJK Dharani Traders–ஐ பார்வையிட்டு களப்பயணம் மேற் கொண்டனர். இந்தப் பயணத்தின் மூலம் மாணவர்கள் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய உரங்கள், அவற்றின் ஊட்டச்சத்து உள்ளடக்கம், உரங்களின் சேமிப்பு மற்றும் கையா ளும் முறைகள், மேலும் விவசாயிகளுக்கு உரங்கள் எவ்வாறு பரிந்துரைக்கப்படுகின்றன என்பது குறித்து நேரடியாக அறிந்து கொண்டனர்.

களப்பயணத்தின் போது, கடை நிர்வாகத்தினர் மாணவர் களுக்கு உரங்களின் வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடு குறித்து விளக்கினர். குறிப்பாக, உரப் பைகளின் பாதுகாப்பான சேமிப்பு, ஈரப்பதத்திலிருந்து பாதுகாப்பு, முறையான கையா ளுதல் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப உரங்களைத் தேர்வு செய்து வழங்கும் நடைமுறைகள் பற்றியும் எடுத்துரைக் கப்பட்டது.

இந்தக் களப்பயணம், வகுப்பறையில் கற்ற வேளாண் உள்ளீடுகள் தொடர்பான அறிவை நடைமுறை அனுபவத்துடன் இணைக்க மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. விவசாயிகளுக்கு தரமான உரங்கள் மற்றும் விதைகளை சரியான முறையில் தேர்வு செய்து பரிந்துரைப்பதில் வேளாண் அறிவின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அட்மா திட்டத்தின் சார்பில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகள் கருத்தரங்கு



அரியலூர், அக்.9

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) வேளாண் மற்றும் சகோதரத்துறை அலுவலர்கள், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டுவிவசாயிகளுக்கு சாகுபடித் தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடி அனுபவங்களை விளக்கும் கிசான் மேளா எனும் விவசாயிகள் கண்காட்சி மற்றும் கருத்துக் காட்சி நிகழ்ச்சி வாணதிரையான்பட்டினம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மா.மகேந்திரவர்மன் அனைவரையும் வரவேற்று ஜெயங்கொண்டம் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றியும் மானிய விவரங்கள் பற்றியும் அறிவுறுத்தி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி தலைமையில் நடைபெற்றது. இதில் இயற்கை விவசாயம், இயற்கை உரம் தயாரிப்பு, இயற்கை உரம் இடுதல் ஆகியவை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் Digital Crop Survey (DCS) மின்னனு பயிர் கணக்கெடுப்பு தற்போது விவசாயிகளில் நிலங்களில் வேளாண் மற்றும் சகோரத்துறை சேர்ந்த அலுவலர் களால் நடைபெற்று வருவது பற்றி எடுத்து கூறினார். மேலும் இந்த பயிர் கணக்கெடுப்புகளை விவசாயிகளே தங்கள் ஸ்மார்ட் போன்களின் FARMER APP என்ற புதிய செயலியை பதிவிறக்கம் செய்து பயிர் கணக்கெடுப்பு செய்யலாம் என ஆலோசனை வழங்கினார். மேலும் வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். சென்ற ஆண்டு நடைபெற்ற பயிர் விளைச்சல் போட்டியில் பரிசு பெற்ற விவசாயிகளுக்கு பரிசு தொகையினை வேளாண்மை இணை

இயக்குநர் வழங்கினார். இத்துடன் கிடங்கு இடுபொருட்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும் விளக்கினார். வேளாண்மை துணை இயக்குநர் வேளாண்மை வணிகம் பச்சையம்மாள் வேளாண் வணிகத்துறை சார்பாக திட்டங்களையும் மானிய விவரங்களையும் தெளிவாக எடுத்துரைத்தார். வேளாண் துறை இயக்குநர் பரமசிவம் மத்திய, மாநில அரசின் மானிய திட்டங்களை எடுத்துரைத்தார் தோட்டக்கலை தொடர்பான திட்டங்களை தோட்டக்கலை அலுவலர் பிரகாஸ் எடுத்துரைத்தார். திரவ உயிர் உர உற்பத்தி மைய வேளாண் அலுவலர் முருகன் திரவ உயிர் உரங்களின் அவசியம் பற்றி விளக்கி கூறினார். மண் மாதிரி மற்றும் மண் மாதிரி பரிசோதனையின் அவசியத்தினை மண் பரிசோதனை வேளாண் அலுவலர் ராகவி எடுத்துக் கூறினார். பயிர் காப்பீடு தொடர்பாக பெருமாள் எடுத்து கூறினார்.

வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் சோனா, கலந்து கொண்டு நவீன வேளாண் கருவிகள், இயந்திர வாடகை மையம், உழவன் செயலி பயன்படுத்தும் முறை குறித்து விளக்கினார். மேலும் வேளாண் பொறியியல் துறை சம்பந்தமான திட்டங்களையும் மானிய விவரங்களையும் எடுத்துகூறினார்.

நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் பாரம்பரிய நெல் இரகங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், நுண் சத்துக்கள், உயிரியல் காரணிகள், உயிர் உரங்கள், திரவ உயிர் உரங்கள் ஆகிய இடுபொருட்கள் விவசாயிகளுக்கு காட்சிப்படுத்தப்பட்டு பயிர் சாகுபடியில் அவற்றை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டது. கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் பாலாஜி, ராம்குமார் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ் குமார், ஆரோக்கியராஜ், ஆகியோர் செய்திருந்தனர். வாண திரையான்பட்டினம் கிராமங்களைச் சேர்ந்த உழவர் குழு விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டு வேளாண் மற்றும் சகோதரத் துறைகள் செயல்படுத்தி வரும் திட்டங்கள், தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொண்டு பயனடைந்தனர். ஜெயங்கொண்டம் இறுதியாக வேளாண்மை துணை அலுவலர் ராஜதுரை நன்றி கூறினார்.



# இப்கோ உர சீர்திருத்த விழிப்புணர்வு விழா



மதுரை, அக்.9

மதுரை மாவட்டம், கொடிக்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உர சீர்திருத்த விழிப்புணர்வு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு இப்கோ கள அதிகாரி ஆனந்தன் தலைமையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சமச்சீர் உரப்பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு, நானோ மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு, இரசாயன உரப்பயன்பாட்டைக் குறைப்பதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

நானோ உரங்களை விதை நேர்த்தி முதல் இலைவழித் தெளிப்பு வரை பயன்படுத்தும் முறைகள், ட்ரோன் தொழில் நுட்பம் மூலம் துல்லியமான உரத்தெளிப்புமற்றும் விவசாயி களுக்கான சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டம் குறித்தும் விளக்கப்பட்டது.

மேலும், உரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட பத்து முக்கிய சீர்திருத்தங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக் கப்பட்டது. மண்வளத்தைப் பாதுகாத்து, உரப்பயன்பாட்டைச் சீரமைத்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில் உர சீர்திருத்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விதைகளின் தரம் குறித்து ஆய்வில் 920 கிலோ விதைகள் விற்பனைக்கு தடை

நாமக்கல், அக்.9

நாமக்கல் மாவட்டத்தில் அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் என 441 விதை விற்பனை நிலையங்கள் உள்ளன. இவ்விதை விற்பனை நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வழங்கப்பட்டு



வருகின்றன. இவ்வாறு விநியோகிக்கப்படும் விதைகளின் தரம் குறித்த ஆய்வு சேலம் விதை ஆய்வு துணை இயக்குநரின் தலைமையில் 2 விதை ஆய்வாளர்கள் கொண்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செப்டம்பர் 2026 மாதம் வரை விதை விற்பனை நிலையங்கள் 1126 முறை தொடர் ஆய்வு செய்யப்பட்டு 935 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இதில் 24 மாதிரிகளில் முளைப்புத்திறன் குறைவு காரணமாக தரமற்றதாக அறியப்பட்டதை அடுத்து 3.95 இலட்சம் மதிப்பிலான 920 கிலோ விதைகள் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டு இவ்விதைகள் விவசாயிகளுக்கு சென்றடைவது தடுக்கப்பட்டுள்ளது.

2 விதை விற்பனையாளர்கள் மீது தரமற்ற விதை விற்பனை செய்தமைக்காக நீதிமன்ற நடிவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. விதை விற்பனையாளர்கள் விதை விற்பனைச் சட்ட விதிமுறைகள்படி தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும்.விதை விற்பனையின்போது முளைப்புத்திறன் அறிக்கை, பதிவுச்சான்று, விலைப்பட்டியல், சரியான இருப்பு விபரம் ஆகியவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும்.

மேலும் காலாவதியான விதைகள் விற்ககூடாது. தவறும் பட்சத்தில் விதைச் சட்ட விதிமுறைகளின் கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகளை விதை விற்பனை நிலையங்களில் வாங்கும் போது விதைப்பொட்டலங்களின் மீது உள்ள விதை விபரங்களில் பயிர், இரகம் நிலை, குவியல் எண், காலாவதி நாள், முளைப்புத்திறன், புறந்தூய்மை, இனத்தூய்மை மற்றும் நமது பகுதிக்குரியதா ஆகிய விபரங்களை சரி பார்த்து வாங்க வேண்டும்.

மேலும் வாங்கும் விதைகளுக்குரிய விலைப்பட்டியலைக் கேட்டுப் பெற வேண்டும். அவ்வாறு பெறும் விலைப்பட்டியலில் பயிர் இரகம், காலாவதி நாள், குவியல் எண் குறிப்பிடப் பட்டுள்ளதா என்பதை சரி பார்த்து பெற வேண்டும். இப்பட்டியலை பயிர் அறுவடை முடியும் வரை பத்திரப்படுத்தி வைத்திருக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சிறந்த வேளாண் நடைமுறைகளுக்கான தொழில்நுட்பங்களை பற்றிய வெளிவளாக பயிற்சி




கடலூர், அக்.9

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் மற்றும் கீரப்பாளையம் வட்டார, வேளாண்மை துறை சார்பாக 09.10.26 அன்று கீரப்பாளையம் வட்டாரம், ஓடாக்கநல்லூர் கிராமத்தில் சிறந்த வேளாண் நடைமுறைகளுக்கான தொழில்நுட்பங்களை பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, சிறந்த வேளாண் நடைமுறைகளுக்கு தேவையான முக்கியத்துவத்தை குறித்தும் எடுத்துரைத்தார். கீரப்பாளையம் வட்டார, வேளாண்மை உதவி இயக்குநர். சிவப்பிரியன், இப்பயிற்சியை தலைமை தாங்கி மண்வளத்தின் முக்கியத்துவம், மண் மாதிரி எடுத்தல் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள வேளாண் திட்டங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியை விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி, முனைவர் கோ.சத்தியநாரயணன், கலந்துக் கொண்டுபல்வேறு விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் பூச்சி மேலாண்மை, அறுவடைக்குபின் சார்ந்த தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் பல்வேறு விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் செயல்முறையில் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண் துறையை சார்ந்த உதவி தோட்டக்கலை அலுவலர் செல்வம் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சுந்தரவசந்தன், சரவணன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இறுதியாக வட்டார தொழில்நுட்ப அலுவலர் ஆனந்த செல்வி நன்றியுரை வழங்கினார். இப்பயிற்சியில் ஓடாக்கநல்லூர் கிராமத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# உழவன் செயலியை பயன்படுத்தும் முறையை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

சிவகங்கை, அக்.9

சிவகங்கை மாவட்டம், விசாலயன்கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிலும் மாணவர்கள் வி. ஹேமன், கோ. ஆதித்தியன், வீ. கோகுல் யஷ்வந்த், மு. லெனில் அசோக், ஆ. பால் லித்திக் ராஜ் மற்றும் சே. சேது மாதவன் ஆகியோர், வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் (BFAC) கீழ் விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கினர்.

இப்பயிற்சியில், தமிழக அரசின் உழவன் செயலியைப் பயன்படுத்தும் முறை, அதன் மூலம் வேளாண் மானியத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு, சந்தை விலை நிலவரம், வானிலைத் தகவல்கள் மற்றும் வேளாண் இடுபொருட்களின் இருப்பு விவரங்களை அறியும் முறைகள் குறித்து விளக்கப்பட்டது.

மேலும், அசோலா உற்பத்தி செய்யும் முறை, அதன் பராமரிப்பு மற்றும் வேளாண்மையில் அதன் முக்கியத்துவம் குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அசோலாவை கால்நடைத் தீவன மாகவும், நெல் சாகுபடியில் உயிர் உரமாகவும் பயன் படுத்துவதன் மூலம் தீவனச் செலவைக் குறைத்து, மண் வளத்தை மேம்படுத்தலாம் என எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயிற்சி விவசாயிகளின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி, நவீன வேளாண் முறைகளைப் பின்பற்ற உதவும் வகையில் அமைந்தது.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கொல்லிமலையில் சர்வதேச காப்பி தின விழா கொண்டாட்டம்




நாமக்கல், அக்.9 காப்பியின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், காப்பி தோட்ட உரிமையாளர்கள், விவசாயிகள் & தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் நலன்களை பாதுகாக்கவும், நியாயமான வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திலும், உலக காப்பி அமைப்புழி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை இணைந்து சர்வதேச காப்பி தினத்தை கடந்த 2015 அக்.1 முதல் கொண்டாடி வருகின்றன. இதனை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் சர்வதேச காப்பிதினவிழா, காப்பி வாரியம் – கொல்லிமலை சார்பாக 01.10.2026 (வியாழக்கிழமை) அன்று கொல்லிமலை மலை வாழ்மக்கள் பெரும் பல நோக்கு கூட்டுறவு கடன் சங்க வளாகம், மூலக்கடை, வாழவந்த நாட்டில் கொண்டடப்பட்டது.

இவ்விழாவிற்கு வருகை புரிந்த கொல்லிமலை மலை வாழ்மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலர், அரியூர்நாடு &திண்ணனூர்நாடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், காப்பி விவசாயிகள் மற்றும் கிராம பொது மக்கள் என அனைவரையும் வரவேற்கும் விதமாக கொல்லிமலை காப்பி வாரியத்தின் விரிவாக்க ஆய்வாளர் ரா.ஜெயசங்கரமூர்த்தி, வரவேற்புரை வழங்கினார். இதன் தொடர்ச்சியாக காப்பியில் தற்போதுள்ள வணிக வாய்ப்புகள் மற்றும் எதிர்கால வணிக வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பின்பு காப்பியின் மருத்துவப் பயன்கள் மற்றும் ஃபில்டர் காப்பி தயாரிக்கும் முறை குறித்து கொல்லிமலை காப்பி வாரியத்தின் உதவி விரிவாக்க அலுவலர்ப.க. சுமதி விரிவாக விளக்கினார்.

இதனையடுத்து கொல்லிமலை மலை வாழ்மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலர் செ.சிவபிரகாசம், கொல்லிமலை ஓரிலேண்ட் காப்பித்தூள் தயாரிக்கும் முறை மற்றும் அதன் சந்தைப்படுத்தல் குறித்து விளக்கமாக கூறினார்.

அடுத்ததாக கொ.சின்னையன், காப்பி விவசாயி, கூச்சக்கிரைப் பட்டி, வாழவந்தநாடு, காப்பியுடன் ஊடுபயிர் சாகுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் கூடுதல் வருமானம் மற்றும் அதன் பயன்கள் குறித்து தனது விவசாய அனுபவங்களை சக காப்பி விவசாயிகளுக்கு பகிர்ந்து கொண்டார். பின்னர் சி.நாகலிங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், ஆரியூர்நாடு, காப்பி விவசாயிகள் இந்தியா காப்பி செயலியில் பதிவு செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்ததுடன், அனைத்து காப்பி விவசாயிகளும் இச்செயலியில் தங்களது விவரங்களைப் பதிவு செய்யுமாறு வலியுறுத்தினார்.

தொடர்ச்சியாக கா.பொ. ஜெகதீசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தின்னனூர்நாடு, காப்பி வாரியத்தின் மூலம் காப்பி விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் வே.விஜயகுமார், காப்பி விவசாயி, ஊர்முடிப்பட்டி, சேலூர்நாடு, காப்பி வாரியத்திடமிருந்து தாம் பெற்ற மானியம் தொடர்பான தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். இறுதியாக சி.செந்தில்குமார், காப்பி விவசாயி, சீக்குப்பாறைப்பட்டி, வாழவந்தநாடு, நன்றியுரையை வழங்கினார்.

அதன் பிறகு விழாவில் ஆர்வமுடன் கலந்து கொண்ட காப்பி விவசாயிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் கொல்லிமலை காப்பி வாரியத்தின் சார்பாக ஃபில்டர் காப்பி வழங்கப்பட்டு விழாவானது இனிதே நிறைவடைந்தது.

## உலக முட்டை தினத்தை முன்னிட்டு முட்டையின் ஊட்டச்சத்து முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு




சேலம், அக்.9

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத்தின் கீழ் இயங்கும் தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில், தங்கி இருந்து ஊரகத் தோட்டக்கலை அனுபவம் மற்றும் வேளாண் தொழில்துறை இணைப்பு (RAWE). சேலம் மாவட்டம், அம்மா பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை அன்று (09.10.26) முட்டையின் ஊட்டச்சத்து முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் M.கனிமொழி, S.ஜெபினா, N.ஹரிணி ஸ்ரீ, T. கண்மணி, B.கார்த்திகா யாதவ், M.கஸ்தூரி, P.காவ்யா, S. கயல்விழி, G.கோகிலா, S.கிருத்திகா, D.குப்பம்மாள் மாணவிகள் முட்டையில் நிறைந்துள்ள புரதச்சத்து வைட்டமின்கள் மற்றும் தாதுசத்துக்கள் குறித்தும் குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் பங்கு குறித்தும் மாணவர் களுக்கு எடுத்துரைக்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் மாணவர்களின் சமூக பங்களிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

